-071

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2007 / 2008 HELD IN AUGUST 2008

## BBA 23 – BUSINESS LAW

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) "பங்குடைமை உடன்படிக்கையொன்று எழுத்திலிருக்க வேண்டிய அவசியமில்லை." ஆராய்க.

(ஆ) என்ன சூழ்நிலைகளில் பங்காளர் ஒருவர் பங்குடைமையொன்றிலிருந்து வெளியேற்றப்படலாம்?

02. (அ) ஓர் ஏற்பின் அவசியமான கூறுகள் எவை?

(ஆ) 'A' என்பவர் மே 02 ஆம் திகதி 'B' என்பவருக்கு கடிதம் மூலம் கொடைமுனைவு செய்து மறுமொழியைத் தபாலில் அனுப்புமாறு கோரியிருந்தார். குறித்த 'A' இன் கடிதமானது மே 05ம் திகதி 'B' ஐ வந்தடைந்தது. 'B' உடனடியாக அதற்குரிய ஏற்பினைத் தபாலிட்டார். அக்கடிதம் 'A' ஐ மே 9ம் திகதி சென்றடைந்தது. 'A' குறித்த கடிதத்தை மே 7 ம் திகதி எதிர்பார்த்திருந்தாராதலால், அவர் 'B' யிடமிருந்து பதில் வரமாட்டாது என நினைத்து, மே 8ம் திகதி குறித்த பொருளை வேறு ஒருவருக்கு விற்று விட்டார்.

'B' உமது ஆலோசனையை நாடுகின்றார். அவருக்கு ஆலோசனை வழங்குக.

03. ஒரு முகவருக்கு அவரது முதல்வர் தொடர்பில் உள்ள உரிமைகள், கடமைகள் எவை?

04. பணம் செலுத்தப்படாத பொருள் விற்பனையாளருக்கு அப்பொருளுக்கு எதிராகவுள்ள பரிகாரங்கள் எவை?

05. 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், ஒரு கம்பனி எவ்வாறு கூட்டிணைக்கப்படலாம்?

06. (அ) காப்புறுதி நலன், (ஆ) அதியுயர் நன்னம்பிக்கை
என்பன பற்றி காப்புறுதி உடன்படிக்கை தொடர்பில் நீர் விளங்கிக் கொள்வதென்ன?

07. ஒரு தொழிலாளியின் வேலை என்ன சூழ்நிலைகளின் கீழ் முடிவுக்குக் கொண்டுவரப்படும்?

08. சிறுகுறிப்பெழுதுக.

(அ) பராயமடையாதவர்களுடான ஒப்பந்தம்
(ஆ) தீங்கும், குற்றவியல் தவறும்

***